# பாம்பு தீண்டுதல்

# தடுப்பு முறைகளும் முதலுதவியும்


- ✓ எல்லாப் பாம்புகளும் விஷப்பாம்புகளில்லை
- ✓ எல்லா விஷப்பாம்புகள் தீண்டுதலும் மரணத்தில் முடிவதில்லை

Written and produced by the Expert Committee on Snakebite

of the Sri Lanka Medical Association

Revised 2025

Sri Lanka Medical Association
6, Wijerama Mawatha
Colombo 7
September 1, 2025



SLMA SNAKEBITE COMMITTEE MEMBERS - 2025

பேராசிரியர். S.A.M. குலரத்ன – தலைவர்

பேராசிரியர். நூமல் ரத்னாயக – செயலாளர்

Dr. மாலிக் பெர்னான்டோ– தொகுப்பாளர்

Dr. வின்ய ஆரியரட்ன

Dr. ரங்க சாமர

பேராசிரியர். K. டயசிரி

பேராசிரியர;. சாமர டலுகம

Dr. கிரிஸ்டோ பெர்னான்டோ

Dr. கசுன் பெர்னான்டோ

Dr. மதுவந்தி கெட்டியாரச்சி

Dr. லகிரு கல்பகே

பேராசிரியர;. கோலித செல்லகேவ

பேராசிரியர;. அன்சன சில்வா

Dr. அன்சிலெம் டி சில்வா

Dr. சாந்த டி சில்வா

Dr. உதய டி சில்வா

Dr. கலன மடுவகே

பேராசிரியர். N. சுகந்தன்

பேராசிரியர். எரங்க விஜயவிக்ரம

## அறிமுகம்

### விஷப்பாம்புகள்

இலங்கையில் அதிக வகையான பாம்புகள் நிலம், சுத்தமான நீர், கடல் நீர் என்பவற்றில் வாழ்கின்றன. ஏறத்தாழ 108 வகையான பாம்புகள் அடையாளங் காணப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளன. புதிய வகையான பாம்புகள் இன்னமும் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் 60 வகையான இனங்கள் உள்நாட்டுக்குரியவை இலங்கையில் மட்டும் காணப்படுபவை. இவற்றில் அநேகமானவை தீங்கு விளைவிக்கக் கூடியவை அல்ல. ஒரு சில வகையான பாம்புகள் மட்டுமே விஷமுள்ளவை எனவும், மருத்துவ ரீதியாக முக்கியமானவையாகவும் கருதப்படுகின்றன. ஒரு பாம்புக்கடி உயிர் ஆபத்து விளைவிக்க கூடியதா, அல்லது குறித்த பாம்புக்கடியினால் ஏற்கனவே மரணங்கள் பதிவாகி உள்ளதா அல்லது பாம்புக்கடியினால் ஏற்பட்ட மருத்துவ பிரச்சினை குறித்த சிகிச்சை பலனாக உயிர் ஆபத்தை ஏற்படுத்தவில்லை என்பதில் அந்த பாம்பு கடியின் முக்கியத்துவம் தங்கியுள்ளது.

நிலங்களில் வாழும் 6 வகையான இனப்பாம்புகள் அதிகளவு விஷமுடைய பாம்புகளாக கருதப்படுகின்றன. இலங்கையில் அநேகமான மரணங்கள் இவ் வகையான பாம்புகளினாலேயே ஏற்படுகின்றன.

1. கண்ணாடி விரியன்
2. நாகபாம்பு
3. எண்ணைவிரியன்
4. எட்டடி விரியன்
5. கூனல் மூக்குப்புடையன்
6. கூர் மூக்கு குழி விரியன் பாம்பு

மேலும் மூன்று வகையான இனப்பாம்புகள் அதிகளவு விசஷமுடைய பாம்புகளாக கருதப்பட்ட போதிலும் அவற்றினால் எவ்வித மரண சம்பவங்களும் அறிக்கையிடப்படவில்லை. அவையாவன

1. கூனல் மூக்குப்புடையன் (Millard’s hump nose viper);
2. சுருட்டைப்பாம்பு
3. பச்சை விரியன; (Green pit viper)

இலங்கையில் காணப்படும் நிலங்களில் வாழும் ஒருவகையான பாம்பினம் மாத்திரம் நடுத்தர விசஷமுடைய பாம்பினமாக கருதப்படுகின்றது. அவை தீண்டும் போது விசஷமேற்றும் தன்மை காணப்படினும் உயிராபத்து ஏற்படுவதில்லை.

- Sri Lankan keelback, Blossom Krait (*Rhabdophis ceylonensis)*

அனைத்து இனக்கடற்பாம்புகளும் அதிகளவு விசஷமுடைய பாம்புகளாக கருதப்படுகின்றன. எனினும் இவ்வாறான பாம்புகள் ஆக்ரோசமான பாம்புகள் அல்ல கோபமூட்டும் சந்தர்ப்பங்களில் தீண்டும் தன்மையுடையது. இலங்கையில் தற்போது 15 வகையான கடற்பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவரை குறைந்தளவான மரணங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் பெரும்பாலானவை வளைந்த மூக்கு கடற்பாம்புகளால் ஏற்படுத்த பட்டவை. அவை மிகவும் ஆபத்தானவை. ˙ அதேபோல அதிகளவு விசஷமுடைய கடற்பாம்பாக கருதப்படுகின்ற
Hydrophis viperinus இன கடற்பாம்புகள் இலங்கையின் வடபகுதி கரையோரங்களில் மட்டும் காணப்படுகின்றன.

குறித்தளவு இனப்பாம்புகள் மற்றும் குறித்தவகை நன்னீர் இனப்பாம்பு அதிக விசுஷம் கொண்டுள்ளதாக தவறான மதிப்பீடும் காணப்படுகின்றது. இவ்வகையான பாம்புகளினது நச்சுப்பற்கள் பின் வளைந்திருப்பதால் மனித உடலினுள் இவற்றால; முறையாக விசுஷத்தை செலுத்த முடிவதில்லை. இவ் வகையான பாம்பின் தீண்டுதலினால் நோவும் வீக்கமும; உண்டாகுமே தவிர மரணமேற்பட்டதாக ஆவணப்படுத்தப்படவில்லை. இலங்கையில் குறைந்தளவு மருத்துவரீதியான முக்கியத்துவம் உள்ள பாம்புகள், அவையாவன.

1. Cat snake (சாரை பாம்பு)
2. Sri Lankan coral snake (*Calliophis melanurus)*
3. Whip snake, Vine snakes (*Ahaetulla* spp.)
4. தண்ணீர்ப்பாம்பு (Dog faced water snake), (*Cerberus rhynchops*)
5. Gerard's water snake *(Gerarda prevostiana)*
6. பறக்கும் பாம்பு - Flying snake(*Chrysopelea* spp.)

## தடுப்பு முறைகள்

பொதுவாக நிலங்களில் வாழும் விஷமுடைய பாம்புகள் மனிதர்கள் நடமாடும் பகுதிகளிலேயே அதிகளவில் காணப்படுகின்றன. பாம்புக்கடிக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் அதிகம் உள்ளவர்கள் சில தடுப்பு முறைகளை கையாள்வதன் மூலம் இந்நாட்டில் பாம்பு தீண்டுதலை குறைத்துக் கொள்ளலாம். பின்வரும் நடவடிக்கைகளை கையாள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவையாவன

1. பெரும்பாலான பாம்புக்கடிகள் கணுக்காலிற்கு கீழில் உள்ள பகுதிகளில் தீண்டுவதால், பாம்புகள் வசிக்கும் இடங்களில வேலை செய்யும் போதும், நடக்கும் போது சப்பாத்து அல்லது கணுக்கால் வரை மூடும் பாதரட்சைகள் (boots) அத்துடன் கணுக்கால் வரை நீளமுள்ள ஆடைகள் அணிந்து பாதுகாத்துக் கொள்ளவும். பாம்புகள் அதிகமாக உயர்ந்து வளர்ந்த புற்கள், பற்றைகள், காடுகள், விவசாய நிலங்கள் என்பவற்றில் காணப்படும்.

2. இரவில் பாம்புகள் மீது மிதிப்பதை தவிர்க்க வெளிச்சம் (torch light) ஒன்றினை எடுத்துச் செல்லவும்.

3. எறும்பு புற்றுகள், அடர்ந்த புதர்கள், மரக்குற்றிகளின் கீழ்ப்பக்கங்கள் மரப் பொந்துகள் போன்றவற்றினுள் கவனயீனமாக கையை வைக்காதீர்கள். மக்கள் குடியிருக்கும் பகுதிகளிலுள்ள பாம்புகள் வசதியாக வாழக் கூடிய இடங்களை துப்பரவாக வைத்திருப்பதன் மூலம் எச்சரிக்கையாக இருங்கள். எறும்பு புற்றுகளை அழிக்கவும், மரப் பொந்துகளை நிரப்பவும் தரையில் விழுந்து கிடக்கும் மரங்கள், குற்றிகளை அகற்றவும். வேலை செய்யும் போது கற்பாறைகள் மரக்குற்றிகள் போன்றவற்றை அகற்றும் போது கவனம் செலுத்தவும்.

ஏனெனில் இவற்றின் கீழ் பாம்புகள் குடியிருக்கும். மரக்குற்றிகளை உருட்டி அகற்றும் போது உங்களை நோக்கி உருட்ட வேண்டும். இதன் மூலம் பாம்பிற்கும் உங்களிற்கும் இடையில் ஒரு தடை ஏற்படும்.

4. பாம்புகள் அதிகம் காணப்படும் பகுதிகளில் நீங்கள் வசிப்பவரானால், பின்வருவனற்றை கவனிக்கவும். பாம்புகள் கதவுகளின் கீழ், கூரைகளில், ஜன்னல்களில், மூடப்படாத வடிகால்களில் மற்றும் பள்ளங்களில் ஊர்ந்து திரியலாம். காலணிகளை அணியும் முன் அவற்றின் உள்ளே பாம்புகள் உள்ளனவா என்று பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளவும். அதேபோல் தலையணைகளின் கீழ், படுக்கை விரிப்புகளில் மற்றும் வெளிப்புறக் குழாய்களின் அருகிலும் கவனமாக இருக்க வேண்டும்.

5. குப்பை கூடங்கள் மற்றும் தேவையற்ற கழிவுகளை கிரமமாக அகற்றி நீங்கள் வாழும் இடங்களை சுத்தமாக வைத்திருப்பதுடன், பாம்பினை கவரும் பிராணிகளான எலி, தவளை போன்றவற்றையும் அகற்றுவது நல்லது.

6. பாம்புகளை பற்றி சிறந்த அறிவுள்ளவர்களே பாம்புகளை கையாளவோ வேண்டும். இறந்தது போல் காணப்படும் பாம்பையும் மிகவும் அவதானமாக கையாள வேண்டும். ஏனெனில் அவை உயிருடன் காணப்படலாம். அத்துடன் இறந்த பாம்புகள் கூட துண்டற்பேரின் மூலம் தீண்ட வாய்ப்புள்ளது. வனவிலங்கு பாதுகாப்பின் அனுமதி இல்லாமல் பாம்புகள் வளர்ப்பதை தவிர்க்க வேண்டும்

## பாம்பு தீண்டுதலின் முதலுதவி

பாம்பு தீண்டுதலுக்கு ஆளானவர்களுக்கு பொருத்தமான முதலுதவிகள் அளிக்கப்பட வேண்டும்.உடலமைப்புக்குள் செலுத்தப்பட்ட விசுஷம் பரவுவதை தடுக்கவும், குறைக்கவும் அத்துடன் தீண்டுதலினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தடுக்கவும் இது உதவும். ஆபத்தான முதலுதவி ஆபத்தை ஏற்படுத்தக் கூடும்.

கீழே எளியதும் இலகுவில் செய்யக்கூடியதும் பயனளிக்கக் கூடியதுமான கெடுதல் இல்லாததுமான வழிமுறைகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

1. பாம்பு தீண்டுதலை தொடர்ந்து, தீண்டப்பட்டவருக்கு பொதுவாக ஏற்படும் பிரதிபலிப்பு பயமாகும். அவருக்கு மரணம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் ஏற்படலாம். அவருக்கு நம்பிக்கையூட்டக்கூடிய முறையில் விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும். இதற்காக பின்வரும் முக்கிய தரவுகளை அழுத்திக் கூற வேண்டும்.
    - ✓ அநேகமான பாம்புகள் விசுஷம் உள்ளவைகள் அல்ல
    - ✓ தீண்டிய பாம்பு விசுஷமுள்ளதாக இருந்தாலும் அது விசுஷத்தை உட்செலுத்தாமலிருக்க முடியும். பல அடையாளங்கள் இருந்தாலும் விசுஷம் உடலினுள் புகுந்துவிட்டது என கருதலாகாது.
    - ✓ விசுஷம் உட்புகுந்தாலும் வைத்தியசாலைகளில் நற்பலனளிக்கக்கூடிய சிகிச்சை முறை உண்டு. இச் சிகிச்சைகள் பூரண குணத்தை தரவல்லது.

2. பாம்பினால் தீண்டப்பட்வரை பிரதானமாக தீண்டப்பட்ட அவயத்தை அசைவற்ற நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் ஏனெனில்,

- ✓ தீண்டப்பட்ட உறுப்பு அசைந்தால் பாம்பினால் உட்புகுத்தப்பட்ட விஷம் உடலினுள் மிக விரைவாக அகத்துறிஞ்ஞப்படும். எனவே தீண்டப்பட்டவரை அசையாது வைத்தாக வேண்டும். அவரை நடத்திச் செல்வதிலும் பார்க்க துக்கிச் செல்வதே சிறந்தது.
- ✓ உறுப்பை ஒரு துண்டு பலகை போன்ற கடினமான பொருளின் மேல் வைத்துக்கட்டி அவ் உறுப்பை அசைவற்றதாக செய்வதால் உட்புகுந்த விஷம் அகச்சுறிஞ்ஞப்படுவதை தாமதப்படுத்தலாம். இது நோவை குறைப்பதற்கும் உதவும்.

3. பாம்பு கடித்த இடத்தில் தோலின் மேலிருக்கும் விஷத்தை அகற்ற அவ்விடத்தை சவர்க்காரமும் நீரும் பாவித்து மெதுவாக கழுவ வேண்டும் அல்லது ஈரத்துணியால் துடைக்க வேண்டும்.

4. விஷப் பாம்பு தீண்டுதலிற்குப்பின் தீண்டப்பட்ட உறுப்பு வீங்குவது ஒரு பொதுவான விடயமாகும். அப்படி வீக்கம் ஏற்படின் அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தடுக்க விரைவாக அணிந்திருக்கும் மோதிரம், வளையல்கள், பாதசரம், நூல், இறுக்கமான உடுப்பு போன்றவற்றை அகற்ற வேண்டும்.

5. வலியை குறைக்க “பரசிற்றமோல்” (Paracetamol) பாவிக்கலாம்

6. பாம்பு தீண்டுதலுக்கு உள்ளானவரை முடியுமான வரை விரைவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். பாம்புக்கடி ஏற்பட்ட சூழ்நிலை பற்றிய தகவல்களை சரியாக வழங்குதல் பாம்பின் வகையை அடையாளம் காண உதவும். கையடக்கத் தொலைபேசி மூலம் பாம்பினை புகைப்படம் எடுப்பதன் மூலம் பாம்பின் வகையை இலகுவாக அடையாளம் காணலாம். சரியான மருத்துவ சிகிச்சையை அளிக்க பாம்பின் வகையை அடையாளம் காணுவது அவசியம். உயிருள்ள அல்லது இறந்த பாம்புகளை மிகவும் அவதானத்துடன் கையாள வேண்டும்.

7. பாம்பு தீண்டுதல் ஏற்பட்டவருக்கு மூச்சுவிடுதலில் சிரமம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் செயற்கை சுவாசத்தை (Mouth to Mouth or Bag & mask) வழங்குவது நோயாளியின் உயிரை காப்பற்ற உதவும் முதலுதவி சிகிச்சை ஆகும். பொதுவாக இவ் பிரச்சினை (Krait) விரியன் இன பாம்புகளால் ஏற்படுகின்றது.

## தவிர்க்கப்பட வேண்டிய சில விடயங்கள்

1. தீண்டப்பட்ட காயத்தை கூரிய கத்தியால் வெட்டுவதும் அல்லது உறிஞ்சும் முறையை கையாள்வதும் தவிர்க்கப்பட வேண்டும். பாம்புகள் அநேகமாக நஞ்சை மிகவும் ஆழமாக புகுத்துவதனால் உறிஞ்சுவது எந்தவித பயனையும் தரமாட்டாது. அனுபமற்ற முறையில் கத்தியால் வெட்டுவதனால் தசை நார், இரத்தக் குழாய்கள் நரம்புகளுக்கு சேதத்தை ஏற்படுத்த நேரிடலாம். இந்த காயங்களிலிருந்து இரத்த பெருக்கு ஏற்படின் அது இன்னும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.
2. முதற் சிகிச்சை அளிப்பதற்கென பாம்பு தீண்டுதலுக்கு உள்ளான பகுதியை கயிறு போன்றவற்றால் இறுக்கி கட்டுப்போடுவதை தவிர்க்கவும். இலங்கைப் பாம்புகளால் ஏற்படும் பாம்புக் கடிக்கு துணிகளால் அழுத்தமாக கட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். இலங்கையில் உள்ள பாம்பு தீண்டுதல்களுக்கு அழுத்தமாக கட்டுவதனால் ஏற்படும் நன்மையான விளைவுகள் இதுவரை எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

3. கொண்டிஸ் (Condys crystals) படிவங்களை போன்ற இரசாயன பொருட்களை காயத்தின் மேல் இடுவதை தவிர்க்கவும். இவை பயனற்றவை, அத்துடன் தசைநார்களையும் சேதப்படுத்தக் கூடியவை. மற்றும் எலுமிச்சைச்சாறு , வெங்காயம்,மஞ்சள் ஆகியவை பயன்படுத்துவதும் தவிர்க்கப்படவேண்டும்.

4. மூக்கின் வழியால் எண்ணெய் போன்ற திரவப்பதார்த்தங்களை புகுத்தி சிகிச்சை அளிப்பது ஆபத்தை ஏற்படுத்தும். ஆதலால் இம் முறைகளைக் கையாளக் கூடாது. ஏயனெல், இதனால்

சுவாசப்பையில் நோய்கள் ஏற்படவும் நிரந்தர செவிட்டு நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு.

5. மதுபானம் விஷத்தை உடம்பில் விரைவில் பரவச் செய்யும் ஆதலால் அதை கொடுக்கக் கூடாது.

6. செவ்விளநீர், இளநீர், பழரசங்கள் என்பவற்றை கொடுக்கக்கூடாது. பாம்பு தீண்டலினால் சிறுநீரகத்தில் சேதம் ஏற்பட்டால் இவற்றிலுள்ள பொட்டாசியம் எனப்படும் ஒரு வகை உப்பு மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்த முடியும்.

7. Asprin (அஸ்பிறின்)வயிற்றிலே இரத்தக்கசிவை ஏற்படுத்தும். பிரதானமாக முத்திரை புடையன் (Russell's viper) தீண்டியபின் அஸ்பிறின் கொடுக்கக் கூடாது. பரசிற்றமோல்/பனடோல் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட வலி நிவாரணி ஆகும்.

8. பயப்பிடுவதை தவிர்க்கவும் பாம்பு தீண்டியவருக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

## 1. இலங்கையில் காணப்படும் அதிக விஷமுடைய பாம்புகள்

| இல | விஞ்ஞானப் பெயர் | தமிழ்ப்பெயர் | சிங்களப்பெயர் | ஆங்கிலப்பெயர் |
|---|---|---|---|---|
| 1 | நயா நயா (*Naja polyocellata*) | நாகபாம்பு<br>நல்ல பாம்பு | நாயா<br>நாகயா | Cobra |
| 2 | பங்கரஸ் சிறிலியஸ் (*Bungarus caeruleus*) | எண்ணை பாம்பு<br>எண்ணை விரியன்<br>எட்டடி விரியன் | தெல் கறவல<br>மகா மறுவா<br>ஹபறலயா<br>மாவில | Common krait |
| 3 | பங்கரஸ் சிலோநிகஸ் (*Bungarus ceylonicus*) | எண்ணை விரியன்<br>எட்டடி விரியன் | டுனுகறவல<br>பொலான்கறவல<br>முடுகறவல | Ceylon krait |
| 4 | டபோய்யா ரசலி (*Daboia russelii*) | முத்திரை புடையன்<br>கண்ணாடி விரியன் | தித் பொலங்கா<br>டறா பொலங்கா | Russell’s viper |
| 5 | ஹிப்னலே இனம் (*Hypnale* spp) | கூனல் மூக்குப்புடையன் | பொலன்<br>திலிஸ்சா<br>குணகற்றுவ | Hump nosed viper |
| 6 | *Hypnale zara* | கூர் மூக்கு குழி விரியன் பாம்பு | சாரகே முகலன் தெலீசா | Lowland hump-nosed viper |

## 2. நடுத்தர விஷமுடைய நிலப்பாம்புகள்

| இல | விஞ்ஞானப் பெயர் | தமிழ்ப்பெயர் | சிங்களப்பெயர் | ஆங்கிலப்பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஹிப்நாலே நேபா *Hypnale nepa* | | மில்றாட்ஜ் முகலன் திலிஸ்சா | Millard's hump nose viper |
| 2 | எக்சிஸ் கறினேற்றஸ் *Echis carinatus* | சுருட்டைப்பாம்பு பால் சுருட்டை | வெலி பொலங்கா | Saw scaled viper |
| 3 | றைமெறிசுரஸ் றைகொனோ செபால]; *Peltopelor trignocephalus* | பச்சை விரியன் கோப்பி விரியன் | பளபொலங்கா | Green pit viper |

## 3. குறைந்த விஷமுடைய நிலப்பாம்புகள்

| இல | விஞ்ஞானப் பெயர் | தமிழ்ப்பெயர் | சிங்களப்பெயர் | ஆங்கிலப்பெயர் |
|---|---|---|---|---|
| 1 | பலோனொபிஸ் சிலோனிகஸ் | | நிகமுவா மல்கரவல | டீடமுளளழஅ மசயவை |

**4. இலங்கையில் காணப்படும் குறைந்தளவுமருத்துவ முக்கியத்துவம் உடைய பாம்புகள்.**

| இல | விஞ்ஞானப் பெயர் | தமிழ்ப்பெயர் | சிங்களப்பெயர் | ஆங்கிலப்பெயர் |
|---|---|---|---|---|
| 1 | போயிகா இனம் (*Boiga* spp) | கோழிப்புடையன் பாம்பு | மாபிலா(Mapila) | Cat snake |
| 2 | கலியோபிஸ் மொலனியூரஸ் சிங்கலியஸ் | | டீபத்களுவா | Sri Lankan coral snake |
| 3 | அஹெற்றுல்லா இனம் (*Ahaetulla* spp) | கண்கொத்திப் பாம்பு<br>பச்சிளை பாம்பு | அகெற்றுள்ளா அஸ்குளா கெனகடய | Whip snake<br>Vine snake |
| 4 | செபருஸ்றைன்சொப்ஸ் (*Cerberus rhynchops*) | தண்ணீர்பாம்பு கண்ணபாம்பு | குணுதிய களுவ டியபாரியா | Dog faced water snake |
| 5 | கெறார்டா பிறிவோஸ்ரினஸ் (*Gerarda prevostiana*) | | ஜெறார்ட்ஜ் டியபாரியா | Gerard’s water snake |
| 6 | கிறிசோபெலியா இனம் (*Chrysopelea* spp) | பறக்கும் பாம்பு பறநாகம் | பொஸ்மால் கரவல | Flying snake<br>Gold and black tree snake |

*Compiled by the SLMA Expert Committee on Snakebite*
*First published by the Sri Lanka Medical Association in 1994*
*Revised 2007,2013,2019*
*This revision 2025*

English version edited by Malik Fernando
Translated by Prof. N. Suganthan
Colombo
September 2025